செ.வெ.எண். 187/2018 நாள்.09.05.2018

# காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், எலப்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற மனுநீதிநாள் முகாமில் 133 பயனாளிகளுக்கு ரூ.19.12 லட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், எலப்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற மனுநீதிநாள் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று பேசியதாவது,

இம்மனுநீதிநாள் முகாமில் தனிநபர் நலத்திட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் மனுநீதி நாள் அன்றே, பொதுமக்களின் மனுக்கள் பெறப்பட்டன. தற்போது மனுநீதி நாள் நடத்தப்படுவதில் பொதுமக்களின் நலன் கருதி தேவைப்படும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது. அதன்படி மனுநீதிநாள் நடைபெறுவதற்கு 15 நாளுக்கு முன்னரே சம்பந்தப்பட்ட ஊராட்சிகளில் சார் ஆட்சியர் மற்றும் துறை அலுவலர்கள் மூலம் மனுக்கள் பெறப்பட்டு, 15 நாட்களுக்குள் பெறப்பட்ட மனுக்களில் எவையெவை தீர்வுகாண முடியுமோ, அம்மனுக்கள் மீது தீர்வு கண்டு, மனுநீதிநாளன்று நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இம்முகாம் தொடர்பாக 15 நாட்களுக்கு முன்னர் பெறப்பட்ட 140 மனுக்களில் தகுதியுள்ள மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு 133 பயனாளிகளுக்கு ரூ.19.12 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இன்று பெறப்பட்ட 155 மனுக்களோடு சேர்த்து, இம்மனுநீதிநாள் மூலம் 295 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. மனுநீதி நாள் முகாம் நடத்தப்படுவதே தங்கள் கோரிக்கைகளை ஏற்று, தீர்வு கண்டு, அதன்மூலம் நலத்திட்ட உதவிகள் அனைவரும் பெற வேண்டும் என்பதற்காக தான். இன்று பெறப்பட்ட 155 டிமனுக்கள் 15 நாட்களுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்தால் அதிக பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டிருக்கும்.

மாவட்டத்தில் உள்ள மற்ற ஒன்றியங்கள், ஊராட்சிகளில் நடைபெறும் இதுபோன்ற மனுநீதிநாள் முகாமில் இனிவரும் காலத்தில் பொதுமக்கள் 15 நாட்களுக்கு முன்னதாக மனுக்கள் முழுவதும் வழங்க வேண்டும். அப்போது தான் நலத்திட்ட உதவிகள் தகுதியுள்ள அனைவருக்கும் மனுநீதிநாள் அன்றே கிடைக்கும். சிமெண்ட் வரவில்லை என தெரிவித்து இருக்கிறார்கள். ஒரு வாரம் அல்லது 10 நாட்களில் தங்களுக்கு தேவைப்படும் சிமெண்ட் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காக தங்கள் வீடு கட்டும் வேலையை தொடர்ந்து மேற்கொண்டு பயனாளிகளே சிமெண்ட் வாங்கி பணியை தொடர வேண்டும். பயனாளிகளால் வாங்கப்பட்ட சிமெண்ட்க்கான பணம் அரசினால் வழங்கப்படும் எனவும் கூறினார். மணல் தட்டுப்பாடு இருந்தால் பொதுமக்கள் எம்செண்ட் பயன்படுத்த வேண்டும். இவ்வூராட்சி மக்களின் கோரிக்கையாக வைக்கப்பட்டுள்ள பாலமுருகன் கோயில் குளம் சீரமைத்தல், ஏரி தூர் வருதல், சாலைவசதிகள் உட்பட தீர்வு காணப்படும். குறிப்பாக தாங்கல் ஏரி தூர்வாரப்படாமல் உள்ளது. அந்த ஏரி தூர்வாரி சீரமைத்து தரப்படும். மேலும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் கோரப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் செய்து தர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

பின்னர் முதியோர், விதவை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகையாக 37 பயனாளிகளுக்கு ரூ.4 லட்சத்து 44 ஆயிரமும், திருமண நிதியுதவித் தொகையாக 4 பயனாளிகளுக்கு ரூ.32 ஆயிரமும், இயற்கை மரணம் மற்றும் ஈமசடங்கு நிவாரணத் தொகையாக 8 பயனாளிகளுக்கு ரூ.1 லட்சத்து 80 ஆயிரமும், கல்வி உதவித்தொகையாக 8 பயனாளிகளுக்கு ரூ.16 ஆயிரத்து 500-ம், 17 பயனாளிகளுக்கு ரூ.59 ஆயிரத்து 500 மதிப்பில் புதிய மின்னனு குடும்ப அட்டையும், 2 பயனாளிகளுக்கு பட்டா மாற்ற ஆணையினையும், வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பில் 40 பயனாளிகளுக்கு ரூ.4 லட்சத்து 92 ஆயிரத்து 28 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளும், தாட்கோ திட்டத்தின்கீழ் 3 பயனாளிகளுக்கு ரூ.6 லட்சத்து 68 ஆயிரத்து 724 மதிப்பிலான மானியத் தொகையும், 10 பயனாளிகளுக்கு ST மக்களுக்கான நல வாரிய அடையாள அட்டையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.20 ஆயிரம் மதிப்பிலான காதொலி கருவிகள், இரண்டு சக்கர நாற்காலி மற்றும் மூன்று சக்கர வண்டிகளும் என ஆகமொத்தம் 133 பயனாளிகளுக்கு ரூ.19.12 லட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை உட்பட பல்வேறு துறைகள் சார்பில் அமைக்கப்பட்டுள்ள பொருட்காட்சி அரங்குகளையும், சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மருத்துவ முகாமினையும் பார்வையிட்டார். இம்முகாமில் அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து வேளாண்மைத்துறை, தாட்கோ மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் திட்ட விளக்கவுரை அளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.மரகரம் குமரவேல், மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.புகழேந்தி, காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு.ஆறுமுகம், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.குணசேகரன், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் (பொ) திரு.நாராயணன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.ஸ்ரீநாத், ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் திருமதி.தமிழ்ச்செல்வி, தாட்கோ மாவட்ட மேலாளர் திருமதி.பிரேமா, மதுராந்தகம் வட்டாட்சியர் திரு.ஏகாம்பரம், தனிவட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திரு.ராஜேந்திரன் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**காஞ்சிபுரம்.**